புதுவரியில்லாத தமிழகத்தின் பட்ஜெட்!

"VIDUTHALAI" — TAMIL DAILY REGD. NO, M4789

விடுதலை

நிறுவனம் 1935

மலர் 26] செலைன குரோதிஞ மாசி 18உ (1—3—65) திங்கள் இதழ் 266

வெளியூர் (2—3—65) — செவ்வாய் 4 பக்கம் விலை 7 காசுகள்

பெரியார் பொன்மொழி

"நமது அரசாங்கத்தின் சோஷ்யலிசதிட்டங்களை நல்ல அளவுக்கு அவர்களுடன் ஒத்துழைத்து நிறைவேறுமபடிச் செய்வோமானால் மக்கள் சுகப்படவும் நமது இயக்கத்திட்டங்கள் நல்ல அளவு நிறைவேற வாய்ப்பும் இருக்கிறது என்பதே எனது கருத்து"

கல்வி

வரும் நிதி ஆண்டில் கல்விக்காக 37 கோடி ரூபாய் (இது ரெவினியூ செலவுகளில் 22சத விகிதமாகும்) ஒதுக்கப்பட்டுள்ளது.

மதிய உணவுத் திட்டம் இப்போது 30,000 துவக்கப் பள்ளிகளில் அமுலில்இருந்து வருகிறது.

16 லட்சம் சிறுவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்காக அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடியே 86 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது!

அரசு ஊழியருக்கு கிராக்கிப்படி உயர்வு

கல்விக்கு ரூ. 37 கோடி

சட்டமன்றத்தில் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் பிரேரணை

சென்னை, மார்ச். 1—

தமிழக சட்டமன்றத்தின் வரவு-செலவுத் தொடர் கூட்டம் இன்று இங்கு துவங்கியது.



இன்று காலை தமிழகமுதல்வரும் நிதிஅமைச்சருமான திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 1965-66ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார். அவர் சமர்ப்பித்த தமிழக பட்ஜெட்டின் முக்கிய அம்சங்களாவன:-

"மூன்றாவது அப்ஸ் தாண்டு திட்டத்தின் இறுதி ஆண்டு என்ற முறையில்வரும் ஆண்டின் நிதி நிலைமை அறிக்கை இருவகையில் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். கடந்த சில ஆண்டுகளாக திட்டத்தின் உயர்ந்த நோக்கங்களையும் அவற்றின் இலக்குகளையும் நிறைவேற்ற வழிவகை செய்யும் ஒரு கருவியாக நிதிநிலை அறிக்கை பயன்பட்டு வந்திருக்கிறது

மூன்றாம் திட்ட முதல் ஆண்டான 1961-62 லிருந்து புக்கொள்ளப்பட்டசெலவு 48.5 கோடி ரூபாய்ஆனால் முடிவில் நம் சாதனை 50 கோடியாக உயர்ந்திருந்ததுஇவ்வாறே 1962-63ல் 55கோடி ரூபாய் செலவு செய்யலாம் என திட்டக் கமிஷன் முதலில் குறிப்பிட்டது. ஆனால், 58.7 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டில் திட்ட வேலைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம் 1963-64ல், திட்டக்கமிஷன் குறிப்பிட்ட 60 கோடி ரூபாய்க்கு மாறாக அவ் வாண்டின் இறுதியில் செலவினம் 71 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது நடப்பு ஆண்டிலும்திட்ட கமிஷன் 68.15 கோடிரூபாய்செலவு செய்யவேண்டுமென முதலில்குறிப்பிட்டது ஆனால் இதற்கு முந்திய ஆண்டுகளில் நமது திட்டங்களை நாம் நிறைவேற்றியவேகத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டமுதலீட்டு அளவினை ரூ.70.53 கோடியாக வரையறை செய்தது. ஆனால், நடப்பு ஆண்டில் திட்ட வேலைகளுக்காக ஏறக்குறைய 78 கோடி ரூபாய் செலவாகுமென்பதை இப்போது தங்கள் முன் வைக்கப்பட்டுள்ள திருத்த மதிப்பீடுகளின் மூலம் அறியலாம்.

1965—66-ம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, மத்திய அரசாங்கத்தின் நிறை வேற்றுவதற்காக நாம் முதலில் நிர்ணயித்த செலவின்அளவு 291 கோடி ரூபாய்தான். ஆனால், முடிவில் நமது சாதனை ஏறக்குறைய 340கோடி ரூபாய் அளவிற்கு உயரும். இப்பணிகளை குறைபாடுகளின்றி நிறைவேற்றுவதற்கு ஒரு சில மாநிலங்களில் நமது மாநிலமும் ஒன்று

பெரும்பாலோர், மாநில சம்பளக் கமிஷனர்களின் பரிசீலனைக்குப் பிறகு இவ்வாண்டு தம் பிறபிவில்லையாதலால், அவர்களுக்கு உதவி தேவை என நாம் கருதுகிறோம், என மேலும்கண்ட வண்ணம் அறிவிப்பு விதங்களை திருத்தியமைக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது:-

	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி விதங்கள்
ரூ. 89 ரூபாய்வரை	ரூ28
90 முதல் 149 ,,	42
150 ,, 209 ,,	54
210 ,, 399 ,,	66
400 ,, 599 ,,	70
600 ,, 799 ,,	80
800 ,, 999 ,,	85
1000 ,, 1200 ,,	90

இம்மாறுதல் ஏப்ரல் மாதம் முதல்தேதியிலிருந்து அதாவது ஏப்ரல்மாதமுதல் தேதியன்று வழங்கப்படும் மார்ச் மாத சம்பளத்திலிருந்து அமுலுக்கு வரும்.

இவ்வுயர்வு, ஸ்தலஸ்தாபனஊழியர்களும், உதவி பெறும் பள்ளிக்கூட ஆசிரியர்களும் கிடைக்கும்.

இதனால் கூடுதல் செலவு, 5 கோடியே 50 லட்ச ரூபாய் ஆகும்.

நாளை இதழில்

தந்தை பெரியார் அவர்களது "சர்க்காருக்கு நல்ல படிப்பினை" தலையங்கம் வெளிவருகிறது.

நாளைய மறுநினம் இதழில்

தந்தை பெரியார் அவர்கள் "என்னைப்பற்றி" என்றுஎழுதியுள்ள அறிக்கை வெளிவருகிறது.

தமிழக பட்ஜெட் உரை!

முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பட்ஜெட் உரை நிகழ்த்துகிறார்.

ஆட்சிமொழிக் கொள்கைபற்றி முதல்வர்!

"இந்தி ஆட்சி மொழி ஆவதுபற்றி அமைச்சர்நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிகள், தேசத்தலைவர்களால் மனப்பூர்வமாக மீண்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு அவை விரைவில் லேயேசட்டப்புத்தகத்தில் பொறிக்கப்படும். இந்தி மொழி பற்றி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ள உண்மையான அய்யப்பாடுகளை அகற்றுவதற்கு இது வழிவகை செய்யும்,

அரசாங்கம் அவர்களுடைய நல்லெண்ண விழிப்புடன் போற்றிக் காத்து வரும் என்றும், அரசாங்கஊழியதில் அவர்களுக்குரிய வேலை வாய்ப்புக்களுக்கும், பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புக்களுக்கும் குந்தகம் நேரா வண்ணம் ஆவன செய்யும் என்றும் அவர்கள் உறுதியாக நம்பலாம்."

இவ்வாறு முதலமைச்சர் பட்ஜெட் உரையில் குறிப்பிட்டார்.

துண்டு விழுந்தாலும் கூட புதுவரிகள் ஏதுமில்லை

சென்னை, மார்ச் 1—

"1965-66ம் ஆண்டிற்கான தமிழக பட்ஜெட்டில் ரூ கோடி 97 லட்ச ரூபாய்கள் துண்டு விழுகிறது என்றாலும் இது ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்திய தாலாகும்.

தற்போது செயலாற்றிவரும் நானகாவது நிதிக் கமிஷன் நம் மாநில அரசின்நிதிதேவைகளைமதிப்பிடுபோது தவிர்க்க முடியாத இக்கடுதல் செலவுப் பொறுப்புக்களை மனதிற் கொண்டு தக்க நிதி ஆதரங்கள் கிடைப்பதற்கு வழிவகை செய்யுமென நம்பலாம் எனவே புதியவரி விதிப்பு ஏதுமின்றி ரெவின்யூ கணக்கில் துண்டுவிழும் இத்தொகையை அப்படியேவிட்டுவைக்கமுடிவு செய்துள்ளோம்"

—இவ்வாறு முதலமைச்சர் திரு ஜெ.சுந்தரம் பகாடியா நேற்று அமோகவெற்றி பெற்று ஆச்சாரியார் கட்சி அபேட்சகரைப்படு தோல்வி அடையச் செய்தார்.

கல்லூரிகளில் மாலை வகுப்புகள்

சென்னை, மார்ச் 1—

"அடுத்த கல்வி ஆண்டு முதல், சென்னையிலும் கோவையிலும் உள்ள அரசினர் கலைக் கல்லூரிகளில் ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் மாலை வகுப்புக்கள் நடத்தப்படும்" என்று முதலமைச்சர், பட்ஜெட் உரையில் அறிவித்தார்.

டில்லி மாநிலங்கள்சபை உபதேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி

போட்டியிட்ட ஆச்சாரியார் கட்சிக்கு படுதோல்வி

டெல்லி, மார்ச் 1—

காங்கிரசு அபேட்சகருக்கு 92 ஓட்டுகளும், சுதந்தராக் கட்சி அபேட்சகருக்கு 39 ஓட்டுகளும் கிடைத்தன.

ஆச்சாரியார்கட்சி மீது மற்றொரு பேரிடி வீழ்ந்திருக்கிறது; ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து டில்லி மாநிலங்கள் அவைக்குநடை பெற்ற உபதேர்தலில் காங்கிரசு அபேட்சகர் திரு. ஜெகநாத பகாடியாவுக்கும் ஆச்சாரியார் கட்சியானகத நந்தராக்கட்சி அபேட்சகர் திரு. மான்சிங்மஹார் என்பவருக்கும் கடுமபோட்டி ஏற்பட்டது

ஜெகந்நாத் பகாடியா நேற்று அமோகவெற்றி பெற்று ஆச்சாரியார் கட்சி அபேட்சகரைப்படு தோல்வி அடையச் செய்தார்.

பிற்படுத்தப் பட்டோருக்கு

தாழ்த்தப் பட்டோர், பிற்படுத்தபட்டோருக்காக 65-66-ம் ஆண்டில் 4 கோடியே 84 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது மாணவர்களுக்கு 'ஸ்காலர்ஷிப்' வழங்கும் திட்டம் தொடர்ந்து நடத்தப் படும்.

தமிழக பட்ஜெட்டிலா முக்கிய அம்சங்கள்

கல்வி அபிவிருத்திக்கு ரூ.37கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அரசு ஊழியர்களுக்கு ரூ5கோடி.58லட்சம்செலவில் நிராக்கிப்படி உயர்த்தப் படுகிறது.

விவசாய அபிவிருத்திக்கு நீர்த்தேக்கம்,பாசன மின்விசைத் திட்டங்களில் தூரித முன்னேற்றத்துக்கு ஏற்பாடு

தொழிற்பயிசிக்கு வசதிகள்; மாவட்டந்தொறும் தொழிற்பயிற்சி பள்ளிகள்.

80லட்சம்டன் அரிசி உற்பத்தி இலக்கு. ஏக்கருக்கு 4000 பவுண்டு நெல்விளையும்புதியவகைநெல்உற்பத்திக்கு ஆதரவளித்தல்.

பிளாக்குகளில் 120 சுகாதார நிலையங்கள் அமைத்தல்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை பஞ்சாயத்துக்கள் மூலம் பிரசாரம் செய்தல்.

குடிதண்ணீர் திட்டங்களுக்காக ரூ. 146 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத்துக்காக ரூ. 484 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

எ.ஃ.ஜி.ஒ.க்களுக்கு

மத்திய அரசாங்கத் தினர் தங்களுடைய ஊழியர்களது அகவிலைப்படி விதங்களை உயர்த்தும் போது 600ரூபாயிலிருந்து 1200 ரூபாய்வரைஊதியம் பெறும் ஊழியர்களைத் விட்டுவிட்டனர்; இத்தரத்தில் உள்ள ஊழியர்களில்

மாதச்சம்பளம்	
ரூ. 89 ரூபாய்வரை	
90 முதல் 149	,,
150 ,, 209	,,
210 ,, 399	,,
400 ,, 599	,,
600 ,, 799	,,
800 ,, 999	,,
1000 ,, 1200	,,

தமிழகத்தின் 1965-66 பட்ஜெட் கூண்ணோட்டம்

ரூபாய் கோடிக்கணக்கில்

	1964—65	1965—66
வருமானம்	147·01	163·63
செலவினங்கள்	151·77	170·60
அதிகச் செலவு		
துண்டுவிழும் தொகை	4·76	6·97

ஒட்டிப் பிறந்த இரட்டையரை பிரிக்க ஆபரேஷன்

நியூயார்க்,மார்ச் 1—

இருதயம் கல்லீரல் பகுதியில் ஒட்டியபடி பிறந்த இரட்டைக் குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் தனிப்படுத்தப் பட்டனர். டெக்சாஸ் மாநில ஹூஸ்டன் மருத்துவமனையில் 3 மணிநேரம் இந்த அறுவை சிகிச்சை நடைபெற்றது. வ